சிறப்பிதழ்
**Special Issue**

உ ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

UGC Journal No 40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2019
தமிழ்த்துறை (சுயநிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி  முனைவர் ந. பிரகாஷ்  முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா  முனைவர் மு. சுகந்தி  பேரா. ப. சூர்யா  பேரா. அ. மகபூ
தமிழ்த்துறை (சுயநிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி - 6

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

# தமிழ் இலக்கியங்களில் காணும் மனிதநேய மாண்புகள்

நா.பன்னீர்செல்வம்
உதவிப் பேராசிரியர்
மனிதவள மாண்புத்துறை ந.க.ம.கல்லூரி, பொள்ளாச்சி-642001.

சமூகத்தின் அங்கமாகத் திகழும் ஒவ்வொரு தனிமனிதனும் தோன்றியதலிருந்து இன்று வரை பல்வேறு ஆசைகளைக் கொண்டு தேவையை நிறைவேற்ற முற்படுகிறான். இதனால் மனம் அலைகழிக்கப்பட்டு அமைதியை இழந்து விடுகிறான். ஒவ்வொரு மனிதனும் மன அமைதியைத் தேடிக் கொண்டிருக்கிறான். மனதை யார் ஒருவர் பண்படுத்தி உயர்ந்த நோக்கங்களைக் கொண்டு, உயர்ந்த செயல்களைச் செய்கிறானோ அவனிடத்தில் பிறருக்கு உதவிபுரிய வேண்டும் என்ற மனிதநேயம் உருவாகும்.

மனிதநேயம் என்பது பரந்துபட்ட பொருட்செறிவு மிக்க ஓர் உன்னத கோட்பாடு. மானுடப் பண்பின் உயர்ந்த நிலையே மனிதநேயம். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் மாண்பு மனிதநேயத்தின் வெளிப்பாடாகும். தன்னை அறிவதன் மூலம் இப்பண்பு வெளிப்படும். இத்தகைய மனிதநேய மாண்புகள் தமிழ் இலக்கயங்களில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை அறிய முற்படுவோம். இது மிகப்பெரிய கடலில் மூழ்கி முத்தெடுப்பதற்கு சமமானது. தமிழ் இலக்கியங்களெல்லாம் காலப் பெட்டகங்களாகும். ஆகவே இதில் காலத்தின் படி ஆராயாமல் மனிதநேயம் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை சிறிய ஆய்வாக செய்துள்ளேன்.

நன்னெறியில் காணும் மனிதநேயம்: சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நன்னெறியில் பிறர்க்கு வரும் துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் பெரியோர்க்கு இயல்பாகும் இதனை 'ஒரு பாடலில்

பெரியவர் தந்நோய்போற் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க – தெரியிழாய்
மண்டு பிணியில் வருந்து பிறவுயிர்க்குக்
கண்டு கலுழுமே கண்.'

(தெரியிழாய்-ஆராய்ந்த அணிகலன்களையுடையவளே் மண்டு-பிணியில் வருந்தும் எரியின் இழுதாவர்-தனக்கு வந்த நோய்போல நினைத்து மனம் நெருப்பிலே பட்ட நெய் போல உருகுவார்)

பொருள்: பிறருக்கு வரும் துன்பத்தைக் கண்டபோது இரங்குதல் அல்லது உருகுதல் பெரியோர்க்கு இயல்பாகும். இப்பாடலில் மனிதநேய மாண்பின் வெளிப்பாட்டை நம்மால் உணர முடிகிறது.

மேலும் பிறிதொரு பாடலில், மேலோர் அன்புடையார்க்குத் தாமே உதவுவதை இவ்வாறு கூறுகிறார்

'தம்மையுந் தங்கடலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்-தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல்'

பொருள்: கடலானது சிறிய உப்பங்கழியிலும் பாய்வது போல அறிவில் உயர்ந்தோர் தன்னைவிட தாழ்ந்தவர்களிடத்தும், தம்மை மதியாரிடத்தும் அன்புக்காட்டி அவரைத் தேடிச்சென்று பாதுகாப்பர் என்பதாகும்.